21.03.2017

## ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-6

## செய்திக்குறிப்பு

ஆசிரியர் தகுதித்தேர்வு 2012, 2013 மற்றும் சிறப்பு ஆசிரியர் தகுதித்தேர்வு 2014 தாள்-IIல் தேர்ச்சி பெற்றவர்களின் தகுதிப்பட்டியலில் (Merit List) உள்ள பணிநாடுநர்களைக் கொண்டு 1111 பணியிடங்கள் நிரப்புவது சார்பான நடவடிக்கை மேற்கொள்ளவேண்டி ஏற்கனவே உள்ள நாடுநர்கள் சார்பான விவரங்கள் ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் 07.03.2017ல் வெளியிடப்பட்டது. Online மூலம் சரிபார்க்க 10.03.2017 முதல் 20.03.2017 வரை கால அவகாசம் வழங்கப்பட்டது. இதில் 24666 நாடுநர்கள் online மூலம் தங்கள் பதிவினை திருத்தம் செய்தும் / சரிபார்த்தும் உள்ளார்கள். மீதம் உள்ள 7961 நாடுநர்கள் சரிபார்க்கவில்லை. மேற்கண்ட 7961 நாடுநர்கள் தங்களின் விவரங்களை online-ல் சரிபார்க்க 23.03.2017 வரையில் கூடுதல் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் online மூலம் தங்களின் விவரங்களை சரிபார்த்துக் கொள்ளலாம். பணிநாடுநர்கள் அவர்தம் சார்பான விவரங்கள் சரியானது என்பதை உறுதிசெய்யவேண்டும். அவ்வாறு பதிவு உறுதி செய்யாத நிலையில் ஏற்கனவே ஆசிரியர் தேர்வு வாரியம் வெளியிட்டுள்ள விவரங்கள் உறுதிசெய்யப்பட்டு தொடர் நடவடிக்கைக்கு கருதப்படும். மேற்குறிப்பிட்ட காலிப் பணியிடங்களுக்கான நேரடி நியமன அறிவிக்கைக்குப் பிறகு சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படுவர்கள் சமர்ப்பிக்கும், அசல் சான்றிதழ்கள் அடிப்படையில், இவ்விவரங்கள் உறுதி செய்யப்படும் என்பதும் தெரிவிக்கலாகிறது.

உறுப்பினர் செயலர்